BESE-046

# இளநிலை கல்வியியல்
# பருவத்தேர்வு (B.Ed.)

**Term-End Examination**

**December, 2006**

## BESE-046 : தமிழ் கற்பித்தல்
## (TEACHING OF TAMIL)

*Time allowed : 3 hours* *Maximum Weightage : 70%*

*குறிப்பு :*

*(அ) அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.*

*(ஆ) அனைத்து வினாக்களுக்கும் மதிப்பெண்கள் சமம்.*

**1.** கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்கு 600 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

நல்ல பாடநூலின் நற்பண்புகள் யாவை ? பாடநூலினைக் கற்பிக்கும் ஆசிரியர் தம் கற்பித்தலை இப்பண்புகளின் துணைகொண்டு எங்ஙனம் சிறப்பாகக் கற்பிக்க இயலும் ?

**அல்லது**

கற்பித்தலில் விளையாட்டுமுறையை விளக்கி, அதன் கோட்பாடுகளை எழுதுக. தமிழ் கற்பித்தலில் எந்த நிலைக்கு இம்முறை சிறந்ததாகக் கருதுகின்றீர் ? இம்முறையின் நிறைகுறைகளை எடுத்துரைக்கவும்.

2. கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்கு 600 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

கேட்கும் திறன் என்றால் என்ன ? கேட்கும் திறனை மாணவர்களிடையே அதிகரிக்க நீவிர் மேற்கொள்ளும் வழி முறைகள் யாவை ?

**அல்லது**

செய்யுள் கற்பித்தலின் நோக்கம் யாது ? செய்யுள் கற்பித்தலின் முறைகளையும் அதன் நிறைகுறைகளையும் விளக்குக.

3. கீழ்க்காணும் விளாக்களில் ஏதேனும் 4 விளாக்களுக்கு 150 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

(i) பாடக்குறிப்பின் பயன் யாது ?
பாட அணுகுமுறை எவ்வாறு அமைந்தி - ருத்தல் வேண்டும் ?

(ii) மேற்பார்வை படிப்பு என்றால் என்ன ? அதன் நிறைகுறைகளை எழுதுக.

(iii) திருத்தமில்லாப்பேச்சின் இயல்புகளைக் கூறுக திருத்தமில்லா பேச்சின் குறைகளை எவ்வாறு களையலாம் ?

(iv) ஒழுங்குமுறை இலக்கணம், நடைமுறை இலக்கணம் - என்றால் என்ன ? இவற்றுள் இலக்கணம் கற்பித்தலில் சிறந்தது எது ? ஏன் ?

(v) வானொலியும், தொலை காட்சியும், கற்பித் - தலில் வகிக்கும் பங்கு யாது ?

(vi) வினாத்தாள் வடிவமைப்பு (Blue Print) என்றால் என்ன ? உங்கள் கற்பித்தலின் போது தயாரிக்கப்பட்ட வினாத்தாள்களின் அடிப்படையில் விளக்குக.

(vii) பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் அவர்களைப் பற்றி குறிப்பு வரைக.

(viii) மாணவர்களிடையே எழுத்துத்திறனை வளர்ப்பதற்கான வழிமுறைகளில் ஏதேனும் ஐந்தினைக் குறிப்பிடுக.

**4.** கீழே கொடுக்கப்பட்டுள்ள விளாவிற்கு 600 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

துணைக் கருவிகளின் வகைகளைக் கூறுக. இடைநிலை (அ) உயர்நிலை வகுப்பில் கற்பித்தலின் போது இத்துணைக்கருவிகளை எங்ஙனம் பயன்படுத்தினீர்கள் என்பதனை உங்கள் பாடக்குறிப்பின் துணை கொண்டு நிறுவுக.